தமிழ்நாடு மின்கழகக் கணக்காயர் களத்தொழிலாளர் சங்கம்
பதிவு எண் - 2472 அங்கீகாரம் பெற்றது.
தலைமை இடம் - சென்னை.

K.சந்திரசேகரன்
தலைவர்

R.சந்திரசேகரன்.
பொதுச்செயலாளர்

**சுற்றறிக்கை-22/2017** **30-12-2017**

அன்புடையீர்,

வணக்கம். மின்சாரத் தொழிலாளர்களின் 01.12.2015 முதல் ஊதிய உயர்வு சம்மந்தமாக இதுவரை சங்கங்களுடன் 6 சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றுள்ளது.

- 06.09.2017 அன்று நடைபெற்ற 4-வது சுற்றுப் பேச்சுவார்த்தையில் வாரிய நிர்வாகம் 2.37 மடங்கு குறைந்த பட்சம் ஊதிய உயர்வு ரூ.760/- அளிப்பதாக முன்மொழிவைத் தந்தது. அதனை நாம் ஏற்றுக் கொள்ள மறுத்து 2.57 மடங்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தோம்.
- பின்னர் 16.10.2017 அன்று நடைபெற்ற 5-வது சுற்றுப் பேச்சு வார்த்தையின் போது 1.1.2016 முதல் 2.57 மடங்கு ஊதிய உயர்வும் 1.10.2017 முதல் பணப்பலனும் வழங்கப்படும் என்று 2-வது முன்மொழிவு வாரியத்தால் தரப்பட்டது.
- 2.57 ஊதிய உயர்வை ஏற்றுக் கொண்டாலும் 1.10.2017 முதல்தான் பணப்பலன் என்பதனை அனைத்துச் சங்கங்களும் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவே உடன்பாடு எதுவும் எட்டப்படவில்லை. அதன் பிறகு மாண்புமிகு மின்துறை அமைச்சரிடம் 24.10.2017 அன்று அனைத்துச்சங்கங்களும் 1.1.2016 முதல் நிலுவைத் தொகை கேட்டு முறையீடு செய்தோம். அலுவலர்களுடன் பேசிவிட்டு முடிவெடுப்பதாக அமைச்சர் தெரிவித்தார். நவம்பர் திங்கள் முழுவதும் காத்திருந்தும் சாதகமான பதிலேதும் நிர்வாகத்திடம் இருந்து வரவில்லை.
- இந்நிலையில் சென்னை ஆர்.கே. நகர் இடைத்தேர்தல் காரணமாக தேர்தல் நடத்தை விதிகள் 24.11.2017 அமுலுக்கு வந்துவிட்டபடியால் தேர்தல் முடிவு வெளியாகும் 24.12.2017 வரை காத்திருக்க வேண்டியதாயிற்று.
- தேர்தல் நடத்தை விதிகள் அமுலில் இருக்கும் போதே 20.12.2017 அன்று ஊதிய உயர்வு மற்றும் சில பிரச்சனைகள் முன்வைத்து தமிழக அரசு போக்குவரத்துத் தொழிலாளர்கள் திடீர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். அவர்களது பிரதான கோரிக்கை அரசு மற்றும் மின்சாரத் தொழிலாளர்களுக்கு இணையாக தங்களுக்கும் ஊதிய உயர்வு வழங்க வேண்டும் என்பதாகும். தேர்தல் நன்னடத்தை விதிகள் முடிந்ததும் 27.12.2017 அன்று பேச்சு வார்த்தை நடத்தி முடிவுகள் மேற்கொள்ளப்படும் என்று அரசு தரப்பில் சமாதானம் செய்யப்பட்டதால் வேலை நிறுத்தம் திரும்பப்பெறப்பட்டது.
- தேர்தல் நடத்தை விதிகள் முடிவுக்கு வந்தபின் மின்சாரவாரியத்தில் ஊதிய உயர்வு பேச்சு வார்த்தை முடிக்கப்பட்டு 27,28 தேதிகளில் ஒப்பந்தம் காணப்படும் என தொழிலாளர்கள் எதிர்பார்த்த நிலையில் வாரிய நிர்வாகம் 16.10.2017-ல் கொடுத்த 2.57 மடங்கு ஊதிய உயர்வுக்கான முன்மொழிவுக்கு தமிழக அரசின் ஒப்புதல் பெறுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாகவும் 2.57-க்குப் பதிலாக 2.41-ஆக குறைக்கப்படவேண்டும் என்று அழுத்தம் கொடுப்பதாகவும் தகவல் வெளியாகின.
- ஏற்கனவே 2.57 உயர்வு வழங்கப்படும். ஆனால் 1.12.2015 முதல் 30.9.2017 வரை 22 மாதங்கள் நிலுவைத் தொகை இல்லை என்பதை ஏற்கத் தயங்கும் தொழிலாளர்கள் தற்போது 2.57-யே குறைக்கப்பட வேண்டும் என்பதை அறிந்து அதிர்ச்சியில் உறைந்து போய் உள்ளனர்.
- மின்சாரத் தொழிலாளர்கள் கவலையை, சங்கங்கள் மின்வாரியத் தலைவரின் கவனத்திற்கு 27.12.2017 அன்று கொணடு சென்றுள்ளதைத் தொடர்ந்து, தமிழக அரசிடம் பேசி சுமூகத் தீர்வு காண முயல்வதாகவும், அதற்கு ஓரிரு வாரங்கள் அவகாசம் தேவைப்படும் என்றும் வாரியத்தலைவர் தெரிவித்தார்.
- இப்பிரச்சனையில், தொழிலாளர்களுக்கு சாதகமாக மின்வாரியத் தலைவருடன், மாண்புமிகு மின்துறை அமைச்சரும் நடவடிக்கை எடுத்துவருவதால் நல்ல தீர்வு ஏற்படும் என்று நம்புகிறோம்.

--2

- 2 ஆண்டுகளாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த களப்பிரிவுத்தொழிலாளர்களின் பதவி உயர்வுக்கு ஒரு வழியாக விமோசனம் கிடைத்துள்ளது.
- பிரச்சனைக்கு தீர்வு காண, தற்போதுள்ள விதிகள்படி தொழிலாளர்களுக்கு பதவி உயர்வு தடை பெறாமல் தொடர்ந்து கிடைத்திட வேண்டுமென்று நாம் வேண்டியபடி, வாரிய நிர்வாகம் வெளியிட்டுள்ள 27.12.2017 உத்திரவின் நகலை இத்துடன் இணைத்துள்ளோம்.

**அனைவருக்கும் புத்தாண்டு**
**மற்றும்**
**பொங்கல் வாழ்த்துக்கள்**

தோழமையுள்ள

பொதுச்செயலாளர்.

பெறுநர்.
கிளைச்செயலாளர்கள்,
கோட்டச்செயலாளர்கள்,
வட்டச்செயலாளர்கள்,
வட்டத்தலைவர்கள்,
மண்டலச்செயலாளர்கள், மற்றும்
மத்திய சங்கப்பொறுப்பாளர்கள்.

நகல் : செய்தி மடல்.

TAMIL NADU GENERATION AND DISTRIBUTION CORPORATION LTD
(ADMINISTRATIVE BRANCH)

144, Anna Salai,
Chennai -2

Memo.No. 034374/414/G46/G462/2016-17, dt.27.12.2017

Sub: TANGEDCO – Instructions to all SE's to intiate the promotion orders to the RWE cadre as per the Court orders – Reg.

Ref: 1.The Common Court Orders of Hon'ble High Court dt.8.6.2017 in W.P.No.12818 of 2017 W.P.No.20504 of 2016, W.P.No. 31736 of 2016, W.P.No.39446 of 2016 and W.P.No.1154 of 2017.
2. Memo.No. 034374/414/G46/G462/2016-12, dt.12.12.2017
3. Memo.No. 034374/414/G46/G462/2016-13, dt.12.12.2017
4. The Hon'ble High Court dated 04.12.2017 on writ Petition No.31303 of 2017 and W.M.P.NO. 34386 of 2017

********

In furtherance of the common order under reference first cited, it is hereby ordered that the eligibility Criteria of experience of five years for each channel, namely, Commercial Inspector and Line Inspector category of Commercial Assistant and Wireman shall be followed until further orders.

2. Promotion to all other RWE categories shall be issued as per existing guidelines / orders.

3. The receipt of this memo may be acknowledged.

A.V.Ravi
Chief Engineer / Personnel